மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.16/2024
அ.வ.எண்.395/2012

1. பழனிசாமி
2. விஜயகுமார் ... மனுதாரர்கள்/1, 2 உத்தேச தரப்பினர்கள்

/எதிராக/

1. பழனியப்பன் ... 1ம் எதிர்மனுதாரர்/வாதி

2. வையாபுரி
3. பெரமகவுண்டர்
4. மயிலி (எ) மயில்
5. அம்மாசி (இறந்தவர்)
6. சின்னபொண்ணு
7. துரைசாமி (இறந்தவர்)
8. சின்னதம்பி
9. மகாலிங்கம்
10. பிரேமலதா
11. ஜெகதீசன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 23.01.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.K.சத்யப்பிரியா அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.R.குருசாமி, வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 5, 7 எதிர்மனுதாரர்கள் இறந்தவர்களாகவும், 6, 10, 11 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாகவும், 8, 9ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.S.ஈஸ்வரன் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151ன் கீழ் இம்மனுவின் மனுதாரர்களான 1, 2 உத்தேச தரப்பினர்களை அசல் வழக்கில் 11, 12 பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிடக்கோரி மனுதாரர்கள் மனுதாக்கல் செய்துள்ளார்கள்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

1ம் எதிர்மனுதாரர்/வாதியால் விளம்புகை, விளைவுறு நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் பாகப்பிரிவினை பரிகாரங்கள் கோரி 2 முதல் 11 வரையிலான எதிர்மனுதாரர்கள்/1 முதல் 10 வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்களுக்கு கடந்த டிசம்பர் இறுதி வாரத்தில் மேற்படி வழக்கில் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட ச.எண்.29/10Bல் 14 சென்ட் நிலத்தையும், ச.எண்.28/1ல் 10 சென்ட் நிலத்தையும், வழக்கு சொத்துகளாக சேர்த்து வழக்கு நடந்து வருவதாக 2ம் மனுதாரர்/1ம் பிரதிவாதி மூலம் தெரியவந்தது. அதேபோல் வழக்குரை சொத்துவிவரத்தில் கூறப்பட்டுள்ள க.எண்.224 கொண்ட வீடு மற்றும் மின் இணைப்பு 140 ஆகியவையும் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டதாகும். எனவே இம்மனுவின் மனுதாரர்களான 1, 2 உத்தேச தரப்பினர்களை அசல் வழக்கில் 11, 12 பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிடக்கோரி மனுதாரர்கள் மனுதாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 1ம் எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(i) இம்மனு பொய்யானது. சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்களுக்கு 1ம் பிரதிவாதி மூலம் கடந்த டிசம்பர் இறுதி வாரத்தில் மனுதாரர்களின் சொத்தையும் சேர்த்து வழக்கை தாக்கல் செய்து, 06.01.2025ம் தேதியன்று பிரதிவாதிகளின் தரப்பு வாதத்திற்காக போடப்பட்டிருப்பதாகவும், வழக்கு சொத்துக்களில் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் ச.எண்.29/10Bல் 14 சென்ட் நிலத்தையும் சேர்த்துள்ளது அவர்களது வழக்கறிஞர் மூலம் தெரியவந்ததாகவும், மேலும் ச.எண்.28/1க்கான சக்குபந்திக்குள் அமைந்துள்ள 10 சென்ட் நிலமும் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதும், வழக்குரை சொத்துவிவரத்தில் கூறப்பட்டுள்ள க.எண்.224 கொண்ட வீடு மற்றும் மின் இணைப்பு 140 ஆகியவை மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதும் பொய்யாகும்.

(ii) மனுதாரர்கள் உரிமை கோரும் சொத்துக்களுக்குண்டான ஆவணங்கள் இவ்வழக்கிற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்டவை ஆகும். இவ்வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில், மேற்படி ஆவணங்களை முன்னிறுத்தி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சரியான சர்வே எண்களையும், செக்குபந்திகளையும், முறையான பரிகாரங்கள் கூறியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சொத்துக்கள் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டதல்ல. மனுதாரர்களால் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களுக்கு எந்த சட்ட வழுவுமில்லை. அவை 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்ய சாட்சிய வழுவற்றவை ஆகும்.

(iii) மனுதாரர்கள் கூறுவதுபோல் தவறான சொத்துக்கள் குறிப்பாக மனுதாரர்களின் சொத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக பிரதிவாதிகளால் நிரூபிக்கப்பட்டால் அந்த சொத்துக்களை விடுத்து மற்ற சொத்துக்களுக்கு மட்டும்தான் தீர்ப்பளிக்கப்படும் என்பது நன்கு நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடாகும். இந்நிலையில் அதை நிரூபிக்க முயற்சிக்காமல், பாகம் பிரிப்பதில் தனக்கு ஆட்சேபனை இல்லை என சாட்சியம் அளித்த பின்பு பிரதிவாதிகள் தற்போது வழக்கின் முடிவை காலதாமதப்படுத்த மனுதாரர்களை முன்னிறுத்தி இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் இவ்வழக்கிற்கு தேவையான தரப்பினர்களோ அல்லது அவசியமான தரப்பினர்களோ அல்ல. எனவே மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

<u>3) 2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 3, 4 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(i) மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட ச.எண்.29/10Bல் உள்ள 14 சென்ட் நிலத்தையும் மற்றும் ச.எண்.28/1ல் உள்ள 10 சென்ட் நிலத்தையும், தாவா சொத்துக்களாக 1ம் எதிர்மனுதாரர்/வாதி வழக்கில் காட்டியுள்ளதும், மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட வீடு, மின் இணைப்பு ஆகியவற்றையும் வழக்கு சொத்துக்களாக 1ம் எதிர்மனுதாரர் காட்டியுள்ளதும் உண்மையாகும். 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு இடையே வெகு காலத்திற்கு முன்பே பாகப்பிரிவினை ஏற்பட்டு, அவரவர் அவரவர்க்கு பிரிந்த சொத்துக்களை அனுபவித்து

வரும் நிலையில், உண்மைகளை மறைத்து 1ம் எதிர்மனுதாரர் தமக்கு பாகமாக பிரிந்த சொத்துக்கள் எதையும் மேற்படி வழக்கில் சொத்துவிவரத்தில் காட்டாமலும், 2, 3 எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை மட்டும் வழக்கு சொத்துக்களாக காட்டி வழக்கிட்டதோடு, இதர 3ம் தரப்பினர்களான மனுதாரர்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும் வேண்டுமென்றே வழக்கு சொத்துக்களாக காட்டி வழக்கிட்டுள்ளார்.

(ii) மேற்படி 1ம் மனுதாரர் பழனிசாமியின் சகோதரரும், 2ம் மனுதாரர் விஜயகுமாரின் தந்தையுமான சின்னபையன் மகன் மணி என்பவரது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும், வீட்டையும் சேர்த்து 1ம் எதிர்மனுதாரர் வழக்கிட்டுள்ள விவரத்தை 2ம் எதிர்மனுதாரர் தனது 05.10.2018 தேதியிட்ட கூடுதல் பதிலுரையில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். மேலும் 1ம் எதிர்மனுதாரரை கடந்த 15.11.2019ம் தேதியில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, மேற்படி மனுபிரமாணப் பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செக்குபந்திக்குட்பட்ட 10சென்ட் நிலமானது மணியின் அண்ணன் பழனிசாமிக்கு பாத்தியப்பட்டது என்பதை ஒப்புக் கொண்டுள்ளார்.

(iii) இருந்த போதும் மேற்படி சொத்துக்களையும் சேர்த்து 1ம் எதிர்மனுதாரர் தொடர்ந்து இவ்வழக்கை நடத்தி வந்ததால் 2ம் எதிர்மனுதாரர், மனுதாரர்களிடம் மேற்படி வழக்கு சொத்துக்களாக அவர்களது சொத்துக்களும் சேர்க்கப்பட்டிருப்பது குறித்து தகவல் தெரிவித்துள்ளார். எனவே மனுதாரர்கள் தங்களுடைய சொத்துக்களை பாதுகாக்கும் பொருட்டு தாக்கல் செய்துள்ள இம்மனு குறித்து 2ம் எதிர்மனுதாரருக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என 2 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

4) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை.

5) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

6) பிரச்சினைக்கான தீர்வு:–

(i) மனுதாரர்கள் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர்/வாதியால் பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி 2 முதல் 11 வரையிலான எதிர்மனுதாரர்கள்/1 முதல் 10 வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்களுக்கு கடந்த டிசம்பர் இறுதி வாரத்தில் மேற்படி வழக்கில் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட ச.எண்.29/10B ல் 14 சென்ட் நிலத்தையும், ச.எண்.28/1 ல் 10 சென்ட் நிலத்தையும், வழக்கு சொத்துகளாக சேர்த்து வழக்கு நடந்து வருவதாக 2ம் மனுதாரர்/1ம் பிரதிவாதி மூலம் தெரியவந்தது என்றும், அதேபோல் வழக்குரை சொத்துவிவரத்தில் கூறப்பட்டுள்ள க.எண்.224 கொண்ட வீடு மற்றும் மின் இணைப்பு 140 ஆகியவையும் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்றும், அதனால் இம்மனுவின் மனுதாரர்கள் / உத்தேச தரப்பினர்களை அசல் வழக்கில் 11, 12 பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிடக்கோரி மனுதாரர்கள் மனுதாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில், இவ்வழக்கானது இரு தரப்பு விசாரணை முடிவுற்று வாதத்திற்காக போடப்பட்டிருந்த நிலையில், டிசம்பர் இறுதி வாரத்தில் மேற்படி வழக்கில் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட ச.எண்.29/10B ல் 14 சென்ட் நிலத்தையும், ச.எண்.28/1 ல் 10 சென்ட் நிலத்தையும், வழக்கு சொத்துகளாக சேர்த்து வழக்கு நடந்து வருவதாக 2ம் மனுதாரர்/1ம் பிரதிவாதி மூலம் தெரியவந்தது என்பதும், மேலும் வழக்குரை சொத்துவிவரத்தில் கூறப்பட்டுள்ள க.எண்.224 கொண்ட வீடு மற்றும் மின் இணைப்பு 140 ஆகியவையும் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதும் பொய்யானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iii) மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இவ்வழக்கிற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்டவை என்றும், இவ்வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி சொத்துக்கள் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டதல்ல என்றும், ஒருவேளை மனுதாரர்களின்

சொத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக பிரதிவாதிகளால் நிரூபிக்கப்பட்டால், அந்த சொத்துக்களை விடுத்து மற்ற சொத்துக்களுக்கு மட்டும்தான் தீர்ப்பளிக்கப்படும் என்பது நன்கு நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடாகும் என்றும், மனுதாரர்கள் இவ்வழக்கிற்கு தேவையான தரப்பினர்களோ அல்லது அவசியமான தரப்பினர்களோ அல்ல என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(iv) 2 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட ச.எண்.29/10B ல் உள்ள 14 சென்ட் நிலத்தையும் மற்றும் ச.எண்.28/1 ல் உள்ள 10 சென்ட் நிலத்தையும், வீடு, மின் இணைப்பு ஆகியவற்றையும் தாவா சொத்துக்களாக காட்டி, 1 ம் எதிர்மனுதாரர்/வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளது உண்மை என்றும், மனுதாரர்களின் சொத்துக்கள் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்பது குறித்து கடந்த 05.10.2018 ம் தேதியில் 2 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த கூடுதல் பதிலுரையிலேயே தெளிவாக கூறப்பட்டுள்ளது என்றும், மேலும் மேற்படி சங்கதியை 1 ம் எதிர்மனுதாரர் கடந்த 15.11.2019 ம் தேதிய தனது குறுக்கு விசாரணை சாட்சியத்திலும் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், இம்மனுவை அனுமதிப்பது தங்களுக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(v) இரு தரப்பு வாதுரைகள், மனுதாரர்கள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்ததன் பேரிலும், கற்றறிந்த இருதரப்பு வழக்கறிஞர்களின் மதிப்புமிக்க வாதங்களை கருத்தில் கொள்கையிலும், தற்போது 1 ம் எதிர்மனுதாரர்/வாதியால் பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி, 2 முதல் 11 வரையிலான எதிர்மனுதாரர்கள்/1 முதல் 10 வரையிலான பிரதிவாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, இரு தரப்பு விசாரணையும் முடிவுற்று வழக்கானது தற்போது பிரதிவாதிகள் தரப்பு வாதத்திற்காக நாளிடப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(vi) இந்நிலையில், இவ்வழக்கில் மனுதாரர்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட ச.எண்.29/10B ல் உள்ள 14 சென்ட் நிலமும், ச.எண்.28/1 ல் உள்ள 10 சென்ட் நிலமும், அவற்றிலுள்ள வீடும், மின் இணைப்பும் வழக்கு சொத்துக்களாக காண்பிக்கப்பட்டு 1 ம்

எதிர்மனுதாரர்/வாதியால் இவ்வழக்கு நடத்தப்பட்டு வருவதாக 2ம் எதிர்மனுதாரர் மூலமாக மனுதாரர்களுக்கு தெரியவந்ததாகவும், அதனால் தங்கள் சொத்துக்களை பாதுகாக்க வேண்டி, தங்களையும் இவ்வழக்கில் 11, 12 பிரதிவாதிகளாக சேர்த்து இவ்வழக்கை விசாரிக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(vii) இந்நிலையில், வழக்குரையை பரிசீலனை செய்கையில், 1ம் எதிர்மனுதாரரால் கடந்த 08.02.2018ம் தேதியில் இ.ம.எண்.796/2017ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி வழக்குரை சொத்து விவரத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, தாசக்காப்பட்டி ச.எண்.29/10Bல் உள்ள 0.11.5 ஏர்ஸ் நிலம் முழுவதும், ச.எண்.28/1ல் உள்ள 0.27.0 ஏர்ஸ் நிலத்தில் 0.10 சென்ட் நிலமும் ச.எண்.29/10Bல் உள்ள கதவு எண்.224ல் உள்ள வில்லை வீடும், மின் இணைப்பு எண்.140ம் கூடுதல் வழக்கு சொத்துக்களாக காண்பிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்படி திருத்தப்பாடுகள் தொடர்பாக 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கடந்த 05.10.2018ம் தேதியில் 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த கூடுதல் பதிலுரையை பரிசீலனை செய்கையில், அதில் ச.எண்.29/10Bல் உள்ள 0.11.5 ஹெக்டேர் நிலத்தில் வடபாதி பாகம் வாதி மற்றும் பிரதிவாதிகளின் பங்காளியான சின்னபையன் மகன் மணி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும், அதில் மேற்படி மணி கூரை வீடு கட்டி வசித்து வருவதாகவும், மேற்படி மணியின் சொத்துக்களையும் வாதி தேவையின்றி இவ்வழக்கில் சேர்த்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(viii) அதேபோல், கடந்த 15.11.2019ம் தேதிய வாதியின் குறுக்கு விசாரணை சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், மேற்படி மனுதாரர்களின் தந்தை மணி என்பவருக்கு ச.எண்.29/10Bல் உள்ள 0.11.5 ஹெக்டேர் நிலத்தில் வடபாதியில் சொத்துக்கள் உள்ளது குறித்து பிரதிவாதிகள் தரப்பில் கேள்விகள் கேட்கப்பட்டு, வாதி அவ்வாறு மேற்படி சர்வே எண்ணில் மனுதாரர்களின் தந்தைக்கு நிலம் ஏதும் இல்லை என மறுத்துள்ளது தெரியவருகிறது. மேலும் இம்மனுவுடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவண எண்–1ன் அடிப்படையில், ச.எண்.29/10Bல் உள்ள 0.11.5 ஹெக்டேர் நிலத்தில் 0.14 சென்டும், ச.எண்.28/1ல் உள்ள 0.27.0 ஹெக்டேர் நிலத்தில் 0.10 சென்டும், ஆக 0.24 சென்ட் நிலம் தங்களுக்கு பாத்தியப்பட்டதாக மனுதாரர்கள் கூறியுள்ளது தெரியவருகிறது.

(ix) இவ்வழக்கின் வழக்குரையை பரிசீலனை செய்கையில், கடந்த 08.02.2018ம் தேதியில் இ.ம.எண்.796/2017ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி மேற்படி ச.எண்.29/10B ல் 0.11.5 ஏர்ஸ் நிலத்தையும், ச.எண்.28/1ல் 0.10 சென்ட் நிலத்தையும் இவ்வழக்கில் வழக்கு சொத்துக்களாக சேர்த்துள்ளது தெரியவருகிறது. அதாவது மேற்படி சொத்துக்களை இவ்வழக்கின் கூடுதல் சொத்துக்களாக சேர்க்க கோரி கடந்த 2017ம் வருடத்திலேயே 1ம் எதிர்மனுதாரர் மனுசெய்துள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில், மனு ஆவண எண்.1ஐ பரிசீலனை செய்கையில், கடந்த 16.03.2018ம் தேதியில் தான் ஒரு பரமசிவம் என்பவரிடமிருந்து மனுதாரர்களின் தந்தை மணி என்பவர் மேற்படி சொத்துக்களை கிரயம் பெற்றுள்ளது தெரியவருகிறது. அதிலும் குறிப்பாக வழக்குரையில் மனுதாரர்கள் திருத்தப்பாடுகள் மேற்கொண்டதற்கு பின்னிட்டு மேற்படி சொத்துக்களை மனுதாரர்களின் தந்தை கிரயம் பெற்றுள்ளது தெரியவருகிறது.

(x) மேற்படி சங்கதிகளை பரிசீலனை செய்கையில், மனுதாரர்களின் தந்தை மணி என்பவருக்கு ச.எண்.29/10B மற்றும் ச.எண்.28/1ல் பாத்தியப்பட்டுள்ளதாக சொல்லப்படும் சொத்துக்கள் அவரது பூர்வீக சொத்துக்கள் அல்ல என்பதும், அவருக்கு கிரயப்படி பாத்தியப்பட்டுள்ள சொத்துகக்ள் என்பதும் தெரியவருகிறது. அதேபோல் மேற்படி மனுதாரர்களின் தந்தைக்கு மேற்படி சொத்துக்களை விற்ற பரமசிவம் என்பவர் கடந்த 2014ம் வருடத்தில் மேற்படி சொத்துக்களை கிரயம் பெற்றதாக மனு ஆவண எண்.1ல் குறிப்பிடப்பட்டுள்ளது தெரியவருகிறது. அவ்வாறு ச.எண்.29/10Bல் உள்ள 0.11.5 ஏர்ஸ் நிலம் முழுவதும் தங்களது கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என 1ம் எதிர்மனுதாரர் கூறும் நிலையில், மேற்படி சொத்துக்களை மனுதாரர்களின் தந்தைக்கு விற்பனை செய்த முன்விற்பனையாளர் பரமசிவம் என்பவர் யாரிடமிருந்து 2017ம் வருடத்தில் மேற்படி சொத்துகக்ளை கிரயம் பெற்றுள்ளார்?, அவர்களுக்கு தாவா சர்வே எண்ணில் என்ன உரிமைமூலம் உள்ளது? என்பதை பரிசீலித்தால்தான் இவ்வழக்கில் தாவா சொத்துக்கள் முழுவதும் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் இதர எதிர்மனுதாரர்களின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தா? என்பதை தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xi) தாவா சொத்தில் ஒரு பகுதி தங்களுக்கு பாத்தியப்பட்டது என கூறி மனுதாரர்கள் மனு ஆவண எண்.1ஐ சமர்ப்பித்துள்ள நிலையில், மேற்படி ஆவணங்கள் இவ்வழக்கிற்கு பின்னிட்டவை என்றாலும் கூட, 1ம் எதிர்மனுதாரர் இவ்வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில்தான் வழக்கில் திருத்தப்பாடுகளை மேற்கொண்டு, மனுதாரர்கள் உரிமை கோரும் சொத்துக்களை இவ்வழக்கில் சேர்த்துள்ளார் என்பதை கருத்தில் கொள்கையிலும், தற்போது மனுதாரர்களை இவ்வழக்கில் ஒரு தரப்பினர்களாக சேர்த்து விசாரித்தால்தான் மேற்படி தாவா சொத்துக்களின் பேரிலுள்ள 1ம் எதிர்மனுதாரர் மற்றும் இதர எதிர்மனுதாரர்களின் பூரண உரிமை குறித்து தீர்மானிக்க இயலும் என்பதாலும், மனுதாரர்கள் இவ்வழக்கை பொறுத்து அவசியமான தரப்பினர்கள் (Necessary parties) என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xii) அதேபோல் மனுதாரர்கள் இவ்வழக்கை பொறுத்து 3ம் நபர்கள் என்றாலும் கூட, இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது ஏற்படுத்தப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில், மனுதாரர்கள் வழக்கு சொத்துக்களில் உரிமை கோரும் நிலையில், மேற்படி மனுதாரர்களை இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்த்து விசாரித்தால்தான் இருதரப்பினரது உரிமையையும் தீர்மானிக்கும் வகையில் ஒரு இறுதியான தீர்ப்பை பகர பிறப்பிக்க முடியும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி இந்நீதிமன்றத்தின் தீர்மானிப்பிற்கு வழிகாட்டும் விதமாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால், **“1983 2 MLJ 561, Adhappa Chettiar vs. R M Meenakshi Achi”** என்ற வழக்கில், “... In suit for partition of joint family properties, if a stranger claims some of the items in dispute in his own absolute right he can be added as a party, for, the court has come to a decision whether those properties would be available or not for partition and for that purpose the stranger would have to be before court...” என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(xiii) மேற்கண்ட சட்டநிலைப்பாட்டை கருத்தில் கொள்கையில், மனுதாரர்கள் இந்த பாகப்பிரிவினை வழக்கை பொறுத்து 3ம் நபர்கள் என்றாலும் கூட, தாவா சொத்துக்களை பொறுத்து மனுதாரர்கள் தங்களுக்கு உரிமையுள்ளது என கூறி, சில ஆவணங்களை தாக்கல் செய்துள்ள நிலையில், மனுதாரர்களையும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து விசாரித்தால் தான் தாவா சொத்துக்களில் எந்த சொத்துக்கள்

பாகப்பிரிவினைக்கு உட்படுத்த இயலும் என்பது குறித்து தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xiv) மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.02.06 13:06:50 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்:– இல்லை</u>

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.02.06 13:06:56 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.